ISSN:2582-9599
பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# காரைக்கால் அம்மையாரின் பதிகங்களில் நாட்டியச் செய்திகள்

8

**முனைவர். யா. சுனிதா**
**முதுநிலை உதவிப் பேராசிரியர், பரதநாட்டியத்துறை**
**கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி**

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர்கள் தொன்றுதொட்டே கலை, இலக்கியங்கள் ஆகியவற்றை பேணிகாத்து வந்துள்ளார்கள். கலைகள் மூலம் இறைவனை கண்டுணரலாம் என்னும் அசைக்கமுடியாத நம்பிக்கைக் கொண்டுள்ளான். இலக்கியங்களும் இந்த கலைகள் குறித்தும் கடவுள்களைக் குறித்தும் எடுத்து இயம்புகின்றது. சங்க காலம் முதல் அதன் பின் தோன்றிய, சிலப்பதிகார காப்பிய காலங்கள், பக்திமை காலங்கள் அதன் பின் தோன்றிய இலக்கியங்கள் யாவுமே கலைகளைக் குறித்த அநேக செய்திகளை எடுத்து இயம்புகின்றது. இதில் தேவார காலத்தில் காரைக்கால் அம்மையாரால் இயற்றப்பட்ட பதிகங்களில் நாட்டியச் செய்திகள் குறித்து ஆய்வதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

திருவாலங்காடு, கொடுகொட்டி, துணங்கை, வட்டணை, புஜங்கக் கூத்து, ஊர்த்துவ தாண்டவம், நடம், நிருத்தம், ஆடல், நட்டம், என்பன ஆகும்.

**முன்னுரை**

தமிழர் தமக்குரிய ஆடற்கலையினை தொன்றுதொட்டு இன்று வரை பேணிக்காத்து வந்துள்ளனர். சங்க காலம் முதல் இன்று வரை நாட்டியக் கலையானது பல்வேறு இலக்கியங்களில் பேசப்பட்டு வருகின்றது. சங்கம் மருவியக் காலத்தில் தோன்றிய முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரம் தமிழரின் கலை மற்றும் பண்பாடு பற்றி கூறும் முதல் காப்பியமாகும். அதன் பின் தோன்றிய பக்திமை காலங்களில் நாட்டியக் குறிப்புகள் அநேகம் காணப்படுகின்றது. குறிப்பாக தேவார காலங்களில் இறைவனை பாக்களால் புகழந்து பாடி துதித்தனர். திருத்தலங்கள் தோறும் சென்று இறைவனை தரிசித்து அந்த தரிசித்த கோலத்தை தன் பாடல் வரிகளில் புனைந்திருக்கின்றனர். ஆடலும், பாடலும் இறைவனை அடைய முக்கியமான வழி என்பதை உணர்ந்திருந்தனர். அதன் பயனே தேவாரப் பதிகங்கள். இந்த பதிக்கங்கள் கடவுள் குறித்து பல விடயங்களைக் கூறினாலும் இவ் ஆய்வுக் கட்டுரைக்கு நாயன்மார்களுள் பெண் நாயன்மாராகிய காரைக்கால் அம்மையாரின் பதிகங்களில் சிவனின் நடனம் குறித்த செய்திகள் பற்றிக் கூறுவதே நோக்கமாகும். இதில் பல நடன வகைகள், நாட்டியத்தின் வேறு சில பெயர்கள் பற்றி மட்டுமே இக்கட்டுரையில் காண்போம்.

**நாட்டிய வகைகள்:**

**1. கொடுகொட்டி :**

காரைக்காலம்மையார் தனது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்திலே கொடுகொட்டிப் பற்றிக் கூறியுள்ளார்.

> **“அந்தியில் மாநடம் ஆடும் எங்கள்**
> **அப்பன் இடந்திருவாலங்காடே” (பா.10)**

என்ற பாடலடியின் ஊடாக இறைவன் ஊழி இறுதியில் ஆடிய கொடுகொட்டிப்பற்றி கூறியிருப்பதைக் காணலாம். இங்கே அந்தி என்பது ஊழிகாலம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இக்கூத்தினை குறித்து கலித்தொகையில்

**"பல்லுருவம் பெயர்த்து நீ கொடுகொட்டி ஆடுங்கால்"**

**(கடவுள்வாழ்த்து. வரி: 5.6)**

என்றும், சிலப்பதிகாரத்தில்

**"….. உமையவள் ஒரு திறனாக ஓங்கிய**

**இமையவன் ஆடிய கொடு கொட்டியாடல்"**

**(சிலப்பதிகாரம் கடலாடுகாதை வரி: 42 : 43)**

என்றும், சுந்தரர் தேவாரத்தில்

**"கோணல் மாமதி சூடரோடு கொடுகொட்டி காலார் கழலாரே"**

**(தேவார திருப்பதிகம், திருமுறை :7 : பதிப்.3 பா – 53)**

என்றும் கொடுகொட்டி கூத்தினைக் குறித்து பல செய்திகள் பயின்று வருகின்றன.

**2. துணங்கைக் கூத்து :**

இக்கூத்திற்கு பலவாறு விளக்கங்கள் கூறப்படுகிறது. இருகையையும் முடக்கி விலாபுறத்தில் ஒத்தியாடல் என்றும், கூத்தி, திருவிழா, பேய்க்கூத்து என்றும், ஆடவரும் மகளீரும் கைக்கோத்து ஆடும் கூத்து, சிங்கிக் கூத்து, குரவையாட்டம் வெற்றி பெற்ற அரசன் வீரருடன் கைக்கோர்த்துக் கொண்டு தேர்த்தட்டில் நின்று ஆடுதல் என்றெல்லாம் பொருள் கூறுவர். (மதுரை தமிழகராதி. ப : 1147) பொதுவாக நாம் முடங்கிய இருகையையும் விலாப்புடைகளில் ஒற்றி அடித்துக் கொண்டு அசைந்தாடும் கூத்து என்று சொல்லலாம். (தமிழ் கலைகள் . பக் - 8)

இக்கூத்தினைக் குறித்து காரைக்கால் அம்மையார் தனது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில்

**"சுழலும் அழல்விழிக் கொள்ளிவாய்ப் பேய்**

**சூழ்ந்து துணைங்கையிட்டோடி ஆடி..**

**(திருவாலங்காட்டு மூத்தத்திருப்பதிகம். பா.7)**

என்ற பாடல் மூலமாகவும்

**"துணங்கை எறிந்து சூழும்**

**நோக்கிச் சுடலை நவிழ்ந் தெங்கும்"**

**(திருவாலங்காட்டு மூத்தத்திருப்பதிகம். பா.3)**

என்ற பாடல் வரிகள் மூலமாகவும் கூறுகிறார். இத்துணங்கைக் கூத்து குறித்து சங்க இலக்கியமாக குறுந்தொகை

**"மகளீர் தழீஇய துணங்கை"  (குறுந்தொகை, பா .31, வரி : 2)**

எனவும், மதுரைக் காஞ்சி

**"இலக்குவனை மடமங்கையர்**

**துணங்கையஞ்சீர் தழுஉ மறப்ப"**

**(பத்துப்பாட்டு மூலமும் உரையும், மதுரைக்காஞ்சி. வரி : 159, 160)**

என்ற வரிகள் மூலமாகவும், சங்கக் காலத்திலிருந்தே துணங்கைக் கூத்து இடம் பெற்ற செய்தியினை அறிகறோம்.

**3.வெறியாட்டு :**

முருக வழிபாடோடு தொடர்புடையதாகக் காணப்படும் இவ்வெறியாட்டானது

**"இயவினன் ஒல்கினன் ஆடுபடமகன்**
**வெறியுறு நுடக்கம் போலத் தோன்றிப்**
**பெருமலைவயின் விலங்கும் அருமணி**
**அரவழங்கும் பெருந்தெய்வத்து" (குறுந்தொகை)**

அதாவது உலாவி அசைந்தாடுகின்ற மடப்பத்தினையுடைய விறலியின் ஆட்டத்திற்கும், அரியமணியை உடைய பாம்பின் ஆட்டத்திற்கும் ஒப்பிடப்படும் எனக் கூறுகிறது.

வெறியாட்டம் குறித்து

**"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
**வெறியாட்டயர்ந்த காந்தளும்" (தொல்.கா.பொரு.60 வரி 1,2)**

**எனத் தொல்காப்பியமும்**

**"வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்**
**செந்நெல் வான்பெரி சிதறியன்ன" (குறுந்தொ. பா:53,வரி: 3,4)**

எனக்குறுந்தொகையும் கூறுகிறது. இக்கூத்தினை காரைக்காலம்மையார் தனது திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகத்திலே

**"கணங்கள் கூடிப் பிணங்கள் மாந்திக் களித்த மனத்தவாய்**
**அணங்கு காட்டில் அணல்கை ஏந்தி அழகன் ஆடுமே"**
**(திரு.மூ.தி. பா:13)**

இங்கு கணங்கள் எல்லாம் கூடி பிணங்களைத் தின்று வெறியாடியதைக் கூறுகிறார்.

**4.புஜங்கக்கூத்து :**

நாட்டிய மரபில் சந்தியா தாண்டவத்தை புஜங்கத் தாண்டவம் அல்லது கூத்து என்று அழைப்பர். இறைவனது ஐந்தொழில்களில் ஒன்றாகிய காத்தல் தொழிலைப் புலப்படுத்துகின்ற சந்தியா தாண்டவத்தை லக்ஷ்மி தாண்டவம், கௌரி தாண்டவம், புஜங்கக் கூத்து, என்றெல்லாம் அழைக்கின்றனர். (இறைவன் ஆடிய 7வகைத் தாண்டவம்) புஜங்கக் கூத்தானது சந்தியா தாண்டவத்தை மட்டுமன்றி, நாட்டிய மரபின் இன்னுமொரு வகைக் கூத்தினையும் குறிக்கிறது. இராவணனுடைய புஜங்களை நசித்து இறைவன் ஆடியக் கூத்தினை புஜங்கக்கூத்து என அழைக்கின்றனர். இப்புஜங்கக் கூத்தினை புஜங்க நடனம், புஜங்க நிருத்தம் என்றெல்லாம் அழைப்பர். (மதுரை தமிழகராதி)

காரைக்காலம்மையாருடைய திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகத்திலே கூறப்படுகின்ற புஜங்கக்கூத்து சந்தியா தாண்டவத்தையே சுட்டுகிறது. பாம்பை அணிந்து இறைவன் புஜங்கக் கூத்தை ஆடுவதாக கூறுகிறார் அம்மையார். சந்தியா தாண்டவத்தைப் பற்றிக் கூறும்போது வாசுகி, கார்கோடன் என்னும் பாம்பரசர்கள் தவங்கிடந்து வேண்டிக் கொள்ள அவர்களுக்கு இரங்கி சிவபெருமான் அப்பாம்புகளை தம் உடலிலும் கையிலும் ஏந்திக் கொண்டார் எனக் கூறுவர். எனவே காரைக்காலம்மையார் கூறுகின்ற புஜங்கக்கூத்து சந்தியா தாண்டவத்தையே குறித்து நிற்கின்றது. இதனை

**"ஆடும் அரவப் புயங்கன் எங்கள்**
**அப்பனிடம் திருவாலங்காடே" (திரு. மூத். திருப். பா :8)**

இறைவன் புஜங்கக்கூத்து ஆடுவதனால் இறைவனுக்கு புஜங்கன், புஜங்கப் பெருமான் போன்ற

பெயர்கள் வழங்கப்படுவதைக் காணலாம்.

**5.ஊர்த்துவ தாண்டவம் :**

இறைவனின் அருளல் தொழிலை புலப்படுத்தும் தாண்டவம் ஊர்த்துவ தாண்டவமாகும். இதனைக் காளி தாண்டவம், அனுக்கிரக தாண்டவம், பெருங்கூத்து என்றெல்லாம் அழைப்பர். 108 கரணங்களில் 50-வது கரணமாகிய லலாட திலகம் இதனைச் சார்ந்ததே. நடனத்திலே தனக்கு ஈடு இணை யாருமில்லை என்ற காளியின் அகங்காரத்தினை நிக்குவதற்காக காளி காண சிவன் தனது ஒரு காலை உயர்த்தி நின்று வேகமாக ஆடியதாகும். ஊர்த்துவ தாண்டவம் பற்றி காரைக்காலம்மையார் தனது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில்

**"மண்டலம் நின்றங் குளாளம் இட்டு**
**வாதித்து வீசி எடுத்தபாதம்**
**அண்டம் உறநிமிர்ந் தாடும் எங்கள்**
**அப்பனிடம் திருவாலங்காடே"          (திருவ.மூத். தி. பா.4)**

என்றும்,

**"மாயன் ஆட மலையான் மகளும் மருண்டு நோக்குமே"**

**(திரு.மு.பதி. பா:19, வரி : 7,8)**

என்ற பாடலடிகளிலும் இதனைக் காணலாம். இத்தாண்டவம் குறித்து திருநாவுக்கரசர்

**"ஆடினார் பெருங்கூத்து காளி காண" (திருநாவு. தேவா. பா:5,வரி:5)**

தன் பதிகத்தில் மேற் கூறியவாறு குறிப்பிடுகிறார்.

**6.வட்டணை :**

வட்டணை என்றால் தாளம், வட்டம், வக்கனை, வட்டமான, செலவு, இடதுசாரி, வலதுசாரியாகச் சுற்றுகை, அடிக்கை, மொந்தகை கேடகம் எனப் பல பெயர் கூறுவர். நாட்டியத்தைப் பொறுத்தவரையில் வட்டணை என்பது சுற்றுதல் அதாவது சுழன்று ஆடுகின்ற ஓர் ஆட்டத்தைக் குறிக்கின்றது. காரைக்காலம்மையார் தமது திருவாலங்காட்டு மூத்தத்திருப்பதிகத்திலே

**"கழல் ஒலி சிலம்பொலிப்பக் காலுயர் வட்டணை இட்டு நட்டம்**
**அழல் உமிழ்ந்து ஓரி கதிக்க ஆடும் அப்பன் இடம் திருவாலங்காடே"**

**(திருவ. மூதாதிப் பா : 8, வரி : 6,7)**

என்று வட்டணைப்பற்றிக் கூறுகிறார். அப்பருடைய தேவாரப் பாடலிலும்

**"அரி அயன் தலைவெட்டி வட்டாடினான்"**

என பிரம்மனின் தலையைக் கொய்து இறைவன் கபாலக் கூத்தினைச் சுழன்று ஆடியதாக காண்கிறோம்.

காரைக்காலம்மையார் பதிகங்களில் மேற்கூறிய கூத்துக்கள் பற்றிய குறிப்புக்கள் மட்டுமின்றி நாட்டியத்தைக் குறிப்பிடும் பல்வேறு பெயர்களும் காணப்படுகிறது.

**நாட்டியம் குறித்த பெயர்கள் :**

பழங்காலத்திலிருந்து நாட்டியமானது பல்வேறு பெயர்களில் சுட்டப்படுகிறது. அதாவது கூத்து ஆடல், சதிர், நிருத்தம், நாடகம், ஆட்டம் போன்ற இன்னும் பல பெயர்களால். அது போலவே காரைக்காலம்மையாரின் பாடல்களிலும்> நாட்டியம் தொடர்பான பல்வேறு பெயர்கள் காணப்படுகிறது. அவையாவன,

**ஆடல் :**

ஆடல் என்ற சொல் பல்வேறு பொருள்களைக் குறித்து நிற்கின்றது. நாட்டியத்திற்குப் பதிலாக ஆடல் என்றச் சொல்லைப் பயன்படுத்துகின்ற மரபு சங்க காலத்திலேயே கையாளப்படுகிறது. **“ஆடலும் ஒல்லார் தம் படலும் மறந்தே”** என புறநானூறும், **“ஆடலும் பாடலும் அழகுமின்றி மூன்றிலொன்று குறைபடாமல்”** என சிலப்பதிகாரமும், **“பண்ணியால் கரணமும் படைப்பு ஆடலும்”** என மணிமேகலையும், **“மறை கலந்து ஒலிபாடலொடு ஆடலராகிய மழுவேந்தி”**என சம்பந்தரும் குறிப்பிடுகிறார். அவ்வாறே அம்மையாரும், **“கலங்கு புனற்கங்கை ஊடுஆடல் ஆடும்”** என ஆடல் குறித்து தன் பதிகங்களில் கூறியுள்ளார்.

**நட்டம் :**

நட்டம் என்றச் சொல் அம்மணம், அழிவு, கூத்து, கேடு என பல பொருள்களைத் தருவதாக கழகத்தமிழகராதி கூறுகிறது. அம்மையார் நட்டம் என்றச் சொல்லாட்சியை

**“பேய் நின்று பாடப் பெருங்காடு
அரங்காப் பெயர்ந்து நட்டம்
போய்நின்று பூதம் தொழச் செய்யும்”**

என திருவிரட்டை மணிமாலையிலும்

**“உட்க விழிக்க ஊமன் வெருட்ட ஒரி கதித்தெங்கும்
பிக்க நட்டம் பேணும் இறைவன் பெயரும் பெருங்காடே”**

என திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்திலும் கூறுகிறார்.

**நடம் :**

நடனத்திற்கு வழங்கப்பெற்ற மறுபெயர்களில் நடமும் ஒன்றாகும். நடமானது கூத்தையும் ஒருவகைப் பண்ணையும் குறித்து நிற்கின்றது.

**“நடமே நாடகம் கண்ணியர் நட்டம்
படிதம் ஆடல் தாண்டவம் பரதம்
ஆறுதல் நூல்கள் வாணிகக் குரவை
நிலையம் நிருத்தம் கூத்தெனப்படுமே”**

என திவாகர நிகண்டு நடம் என்பது நாட்டியத்திற்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் எனக் கூறுகிறது.

அம்மையார் நடம் என்றச் சொல்லை அற்புதத்திருவந்தாதியில்

**“ஆகத்தான் அங்காத்து அனல் உமிழும் ஐவாய
நாகத்தாய் ஆட நடன்”**

எனவும், திருவாலங்காட்டு பதிகத்தில்

**“அந்தியில் மாநடம் ஆடுமெங்கள்
அப்பனிடம் எங்கள் திரு ஆலங்காடே”** எனவும் கூறுகிறார்.

**நிருத்தம் :**

இறைவன் நாட்டியமாடுவதால் நிருத்தன், நிருத்தனார் என வேறு பெயர்களில் அழைப்பர். அம்மையார் தன் பதிகத்தில் சிவபெருமான் மாலை நேரத்தில் கைகளில் நெருப்பேந்தி ஆடுகிறார் எனவும்,

**“அந்தி நிருத்தம் அனல்கை
ஏந்தி அழகனாடுமே”**

என கூறுகிறார். மட்டுமல்லாமல் அம்மையார் தன் பதிகங்களில் சிவபெருமானை

**“ஆடும் அரவப் புஜங்கன் எங்கள்**
**அப்பனிடம் திருவாலங்காடே”**

புஜங்கன் என்ற பெயரிலும் அழைத்து மகிழ்கின்றார்.

**நிறைவுரை :**

காரைக்காலம்மையார் தன்னுடைய பதிகங்களில் கொடுகொட்டி, துணங்கை, வெறியாட்டு, புஜங்கக்கூத்து, ஊர்த்துவத் தாண்டவம், வட்டணை போன்ற நாட்டியம் தொடர்பான கூத்துக்களையும், ஆடல் நட்டம், நடம், நிருத்தம் என்ற நாட்டியம் தொடர்பான பெயர்களையும், சிவபெருமான் தன் கரத்தில் அனல் ஏந்தி, அரவம் அணிந்து ஆடினார் என பல நாட்டியம் தொடர்பான செய்திகளைக் கூறுகின்றார். அதுமட்டுமல்லாமல் இவருடைய பாடல்கள் அனைத்துமே நாட்டியத்தில் கீர்த்தனைகளாக பயன்படுத்தலாம் எனவும், சஞ்சாரி பாவங்களுக்கு மிகவும் ஏற்றதாகவும் காணப்படுகிறது. அது மட்டுமல்லாமல் தேவாரத் திருப்பதிகங்களில் பல இசைக் கருவிகள் குறித்தும், பண்கள் குறித்தச் செய்திகளும் விரவிக்கிடக்கின்றன. நடமாடும் கூத்தப் பெருமானை அடைய சிறந்த வழிகளில் ஒன்று இசையும், நடனமுமே ஆகும்.

**துணைநின்ற நூல்கள் :**

1. நாராயண வேலுப்பிள்ளை. எம். பன்னிரு திருமுறைகள் (தொகுதி17), சென்னை, வர்த்தமானன் பதிப்பகம். 1995.
2. கல்யாண சுந்தரனார். வி, காரைக்காலம்மையார் திருமுறை, பாரிநிலையம், சென்னை – 1994
3. ஞானசம்பந்தன். அ.ச. தேவாரத் திருப்பதிகங்கள், கங்கை புத்தக நிலையம், சென்னை – 1998
4. ஞானகுலேந்திரன், பழந்தமிழர் ஆடலில் இசை, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் - 1990
5. பத்மா சுப்ரமணியம். பரதக்கலைக் கோட்பாடு, வானதி பதிப்பகம், சென்னை – 1991
6. சிவகாமி. ச. இலக்கியப் பொருட்பகுப்பாய்வு, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை - 1991